புதுச்சேரி மாநில
தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ்
சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 197 | 22-01-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 197 | 22-01-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## வரும் 23ம் தேதி மதுராந்தகம் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்: பாதுகாப்பு குறித்து எஸ்பிஜி ஏஜஜி ஆய்வு

மீனம்பாக்கம்: ஜன.22–

மதுராந்தகத்தில் வரும் 23ம் தேதி நடைபெறும் பாஜ பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். இதைத் தொடர்ந்து, சென்னை விமான நிலையம் மற்றும் மதுராந்தகத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேற்று டெல்லியிலிருந்து வந்திருந்த எஸ்பிஜி எனும் சிறப்பு பாதுகாப்பு படை ஏஐஜி தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் உள்ள விளையாட்டு திடலில் வரும் 23ம் தேதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் பிரமாண்ட தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்ற பிரதமர் நரேந்திர மோடி வருகை தருகிறார். மேலும், இக்கூட்டத்தில் அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, ஜி.கே. வாசன், ஜான்பாண்டியன் உள்பட பல்வேறு கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.



இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக, திருவனந்தபுரத்தில் இருந்து வரும் 23ம் தேதி மதியம் 1.15 மணியளவில் புறப்பட்டு, மதியம் 2.15 மணியளவில் பிரதமர் மோடி தனி விமானத்தில் சென்னை பழைய விமான நிலையத்தில் வந்திறங்குகிறார். பின்னர், அங்கிருந்து தனி ஹெலிகாப்டரில் மதியம் 2.25 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெறும் மதுராந்தகத்துக்கு பிரதமர் மோடி புறப்பட்டு செல்கிறார். மாலை 3 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்துக்கு சென்றடைகிறார். பின்னர் மாலை 3 மணியிலிருந்து 4.30 மணிவரை மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். இதைத் தொடர்ந்து, மதுராந்தகத்தில் மாலை 4.30 மணியளவில் தனி ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டு, சென்னை பழைய விமானநிலையத்திற்கு மாலை 5 மணியளவில் வந்தடைகிறார்.

பின்னர், மாலை 5.05 மணியளவில் தனி விமானத்தில் பிரதமர் மோடி புதுடெல்லிக்குப் புறப்பட்டு செல்கிறார். மதுராந்தகத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்துக்கு பங்கேற்க சென்னைக்கு பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு, டெல்லியிலிருந்து நேற்று சென்னை விமானநிலையத்தில் எஸ்பிஜி எனும் சிறப்பு பாதுகாப்பு படை ஏஐஜி அமிசந்த் யாதவ் தலைமையிலான குழுவினர் வந்திறங்கினர். பின்னர், சென்னை பழைய விமான நிலையத்தில் பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து எஸ்பிஜி சார்பில் ஏஎஸ்எல் எனும் அட்வான்ஸ் செக்யூரிட்டி லையேசன் கூட்டத்தை நடத்தினர். இதில் சென்னை மாநகர உயர் காவல்துறை அதிகாரிகள், மத்திய தொழில் பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், சென்னை விமானநிலைய அதிகாரிகள், மத்தியமாநில உளவு பிரிவினர், மிக முக்கிய பிரமுகரின் பாதுகாப்பு அதிகாரிகள், மருத்துவம் மற்றும் தீயணைப்புத்துறை அதிகாரிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து, சென்னை பழைய விமான நிலையத்தில் பிரதமரின் தனி விமானம் வந்து நிற்கும் பகுதி, மதுராந்தகம் செல்ல பிரதமருக்கு பயன்படுத்தப்படும் ஹெலிகாப்டர் நிற்கும் பகுதி, அப்பகுதியில் எந்தெந்த அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது குறித்து எஸ்பிஜியின் ஏஐஜி தலைமையிலான குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். இதையடுத்து, சென்னை பழைய விமானநிலைய பகுதிகள் அனைத்தும் நேற்று முதல் வரும் 23ம் தேதிவரை மொத்தம் 4 நாட்களுக்கு முழு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவர முடிவு செய்யப்பட்டு உள்ளது. பின்னர் எஸ்பிஜி குழுவினர் மதுராங்கத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்துக்கு காரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும் இடம், தனி ஹெலிகாப்டர் வந்திறங்கும் இடம் உள்பட பல்வேறு இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மதுராந்தகம் கூட்டத்துக்காக சுமார் 3 மணி நேரம் மட்டுமே சென்னைக்கு பிரதமர் மோடி வந்து செல்லவிருப்பதால், சென்னை விமானநிலையத்தில் விஐபிக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சந்தித்து பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் தகவல் கூறப்படுகிறது.

## தமிழ்நாடு மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க கோரி மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் கடிதம்

சென்னை: ஜன.22–

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதைத் தடுத்திடவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.






மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் நேற்று (21 .01 . 2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுத்திடவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு நேற்று (21.012.026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், இரண்டு மீன்பிடிப் படகுகளில் வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் நேற்று (21.01. 2026) சிறைபிடிக்கப்பட்டுள்ள மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச்சேர்ந்த மீனவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்று கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுவதும் தடையின்றித் தொடர்வது மிகுந்த கவலைக்குரியதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் , இன்றுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 254 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 90 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக நிகழும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமூகத்தினருக்குக் கடுமையான இன்னல்களை ஏற்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் , தமிழக மீனவர்கள் இலங்கையில் நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், அவர்களது குடும்பத்தினருக்கு கடுமையான பொருளாதார நெருக்கடியினையும் தொடர்ச்சியான LD60T உளைச்சலையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், இத்தகைய சம்பவங்கள், கடலோரப் பகுதிகளின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை ஆழமாகச் சீர்குலைத்துள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுக்கவும். ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டுமென்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய் சங்கரை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## "என்டிஏ கூட்டணியில் இணைந்துள்ள டிடிவி தினகரனை வரவேற்கிறேன்" : இபிஎஸ்

சென்னை: ஜன.22–

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், டிடிவி தினகரனின் அமமுக கட்சி மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில், "தீயசக்தி திமுகவின் கொடுங்கோல் ஆட்சியை வேரடி மண்ணோடு வீழ்த்திடவும், வாரிசு அரசியலுக்கு முற்றுப் புள்ளியை வைத்திடவும், ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் அமைத்திட வேண்டும்.

இந்நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இன்றைய தினம் இணைந்துள்ள அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் மரியாதைக்குரிய டிடிவி.தினகரனை அன்போடு வரவேற்று, அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, திமுக குடும்ப ஆட்சியின் பிடியில் இருந்து மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்கவே முடியாது. பழனிசாமி இருக்கும் கட்சியில் கூட்டணியில் இருப்பதற்குப் பதில் தூக்கில் தொங்கிவிடலாம் என தே.ஜ கூட்டணியில் இருந்து வெளியேறிய டிடிவி தினகரன், கடும் விமர்சனங்களை முன்வைத்ததை மறந்திருக்க முடியாது.

இந்நிலையில் இன்று, "மக்கள் விரும்பும் நல்லாட்சியை தமிழ்நாட்டில் உருவாக்க தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைகிறோம்" என்று டிடிவியும்; "மரியாதைக்குரிய டிடிவியை வரவேற்கிறேன்" என்று எடப்பாடி பழனிசாமியும் தெரிவித்துள்ளனர்.

## கிருஷ்ணகிரி மாவட்ட பாஜக நிர்வாகி ஜே.எம். ரமேஷ் மாநிலப் பொறுப்பாளராக நியமனம்

கிருஷ்ணிரி. ஜன.22–

கிருஷ்ணகிரி மாவட்டம் சந்தூர் பகுதியைச் சேர்ந்த பாஜக பிரமுகர் ஜே.எம். ரமேஷ், கட்சியின் மாநில பிரச்சாரப் பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அமைப்பாளர் டி. எஸ். பாண்டியராஜன் அளித்த பரிந்துரையின் அடிப்படையில், பாஜக மாநிலத் தலைவர் நைனார் நாகேந்திரன் இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு சமூக வலைத்தளங்கள் வாயிலாக வெளியிடப்பட்டது. புதிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜே.எம். ரமேஷிற்கு கிருஷ்ணகிரி மாவட்ட பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் நேரிலும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாநில அளவிலான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது கட்சி வட்டாரத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# புதுவை மாநில அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை குறித்து அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம்

## புதுவை மாநில செயலாளர் ஓம்சக்தி சேகர் அறிக்கை



புதுச்சேரி, ஜன.22–

புதுவை மாநில அரசுப் பள்ளிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை இன்று பொதுவிவாதமாக மாறியுள்ளது. பல பள்ளிகளில் தேவையான ஆசிரியர்கள் இல்லாததால், மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கப்படுவதோடு, பெற்றோர்களும் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக அரசு கொண்டு வரும் இலவச சைக்கிள், லேப்டாப், இலவச சீருடை, மாலை நேர சிற்றுண்டி (ஸ்நாக்ஸ்) போன்ற திட்டங்கள் வரவேற்கத்தக்கவை. ஆனால், இத்திட்டங்கள் முழுமையாக மாணவர்களிடம் சென்றடையவும், அவற்றின் பயன் சிறப்பாக அமையவும், ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

புதுவை மாநிலத்தில் சிங்கிஷிணி பாடத்திட்டம் அமல்படுத்தப்பட்டதன் பின்னர், ஆசிரியர்களின் பணிச்சுமை கணிசமாக அதிகரித்துள்ளது. இதற்கிடையில், தேர்தல் உள்ளிட்ட பல்வேறு அரசு பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவதால், அவர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகி, கற்பித்தல் பணிகளில் கவனம் சிதறும் நிலை உருவாகியுள்ளது.

அரசுத் திட்டங்கள் பள்ளிகளில் முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் ஆய்வு செய்வதைவிட, கள நிலவரத்தையும் நேரடியாக ஆய்வு செய்து உறுதிப்படுத்துவது அவசியம். திட்டங்களை அறிவிப்பதே இலக்காக இல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்த தேவையான மனித வளத்தை உறுதி செய்வதே அரசின் முதன்மை பொறுப்பாக இருக்க வேண்டும்.

தற்போது கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில்,

* தொடக்கப் பள்ளிகளில் *192* ஆசிரியர் பணியிடங்கள்
* உயர்நிலைப் பள்ளிகளில் *300* ஆசிரியர் பணியிடங்கள்
* நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் *70* பணியிடங்கள்
* உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் *35* பணியிடங்கள்
* தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் *10* பணியிடங்கள்
* மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் *15* பணியிடங்கள்
* நூலகர்கள் *50* பணியிடங்கள்
* சிறப்பு ஆசிரியர்கள் *124* பணியிடங்கள்

என மொத்தமாக பெருமளவில் பணியிடங்கள் காலியாக உள்ளன.

சிறிய யூனியன் பிரதேசமான புதுவையில் இவ்வளவு அதிகமான காலிப்பணியிடங்கள் இருப்பது மிகுந்த வேதனைக்குரியது. தேர்வுகள் நெருங்கி வரும் நிலையில், ஆசிரியர்களை பிற அரசு பணிகளில் ஈடுபடுத்துவதை தவிர்த்து, அவர்களின் பணிச்சுமையை குறைத்து, கற்பித்தல் பணியில் முழுமையாக கவனம் செலுத்தச் செய்வது காலத்தின் அவசியமாகிறது.

எனவே, கல்வித்துறை உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஆசிரியர், தலைமை ஆசிரியர் மற்றும் முதல்வர் உள்ளிட்ட அனைத்து காலிப் பணியிடங்களையும் விரைவில் நிரப்ப வேண்டும். இதுவே மாணவர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தின் நியாயமான மற்றும் முக்கியமான கோரிக்கையாகும்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சிக்குட்பட்ட செஞ்சி நான்கு முனை சந்திப்பு பகுதியில் புரட்சியாளர் டாக்டர்.அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலை அமைப்பது தொடர்பாக செஞ்சி பேரூராட்சி மன்ற கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றி அமைக்ககோரி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மாவட்ட செயலாளர் செஞ்சிசிவா தலைமையில் விசிகவினர் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தானை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். ஒன்றிய செயலாளர்கள் ராசாராமன்,தவசீலன், நகர பொருளாளர் வழக்கறிஞர் காமராஜ், மாவட்ட துணை அமைப்பாளர் மா.க.வெங்கடேசன்,நகர அமைப்பாளர் பிரபு,நகர துணை செயலாளர்கள் தலித்மகிழ்வரசு, அரிக்குமார்,ஸ்டியோபாபு, ஜெயக்குமார், பாலாஜி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்ற விழாவில், இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஈரோடு ஆட்சியர்ச. கந்தசாமி பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் மான்விழி, மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குனர் ஜோதி, மாவட்ட நூலக அலுவலர் சாமிநாதன், மாவட்ட முதல் நிலை நூலகர் கருத்தி ரூ மன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மாதாந்திர பராமரிப்பு பணிகள் மின் தடை அறிவிப்பு.

கிருஷ்ணகிரி, ஜன.22–

கிருஷ்ணகிரி கோட்டம் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் வருகிற 220126 வியாழன் அன்று 110/3311கிவோ பெண்ணேஸ்வரமடம் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால்

காவேரிப்பட்டணம்,பெண்னேஸ்வரமடம், சவுளூர்,சந்தாபுரம், நரிமேடு, எர்ர அள்ளி, போத்தாபுரம் பையூர் பெரியண்ணன் கொட்டாய், தேவர்முக்குளம் தேர்பட்டி, பாலனூர்,ஜெகதாப், பாளையம், மில்மேடு, இந்திராநகர் குண்டலப்பட்டி,கத்தேரி,கருக்கன்சாவடி.மேல்மக்கான் தாளமடுவு,பணகமுட்லு தளியூர், மோரன அள்ளி,தொட்டிபள்ளம்,சாப்பர்த்தி,கொத்தலம் குண்டாங்காடு,போடரள்ளி குட்டிவேடிசம்பட்டி மலையாண்டள்ளி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் 220126 அன்று காலை 9மணி முதல் மாலை 5மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும் என்று பொது மக்களுக்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அறிவித்துள்ளது.

# சேலத்தில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு அரசமைப்பு சட்டத்தை சமரசமின்றி பாதுகாக்க வேண்டும் என பேச்சு.

சேலம். ஜன.22–

அரசமைப்பு சட்டத்தை சமரசமின்றி பாதுகாக்க மாணவர்கள் முன்வர வேண்டும் என முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு கூறினார்.

சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் அரசமைப்புச் சட்டம் குறித்த தொடர் விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சிக்கு சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரி தலைவர் த.சரவணன் தலைமை வகித்தார்.

அதன் ஒரு பகுதியாக 'இந்திய அரசமைப்பு சட்டத்தின் அவசியம்' என்ற தலைப்பில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு செவ்வாய்க்கிழமை பேசுகையில், இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு வாழும் ஆவணம். இந்திய அரசமைப்புச் சட்டத்தை இதுவரை 106 முறை திருத்தம் செய்யப்பட் டுள்ளது. ஒவ்வொரு திருத்தமும் மக்கள் உணர்வுகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப செய்யப்பட்டு ஒரு பலமான ஆவணமாக உருப்பெற்றுள்ளது.

1975 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவில் நெருக்கடி நிலை வந்தபோது, நமது அடிப்படை உரிமைகள் நிறுத்தி வைக்கப்பட்டதால் சுமார் 22,000 பேர் மிசா சட்டத்தின்கீழ் சிறைப்படுத் தப்பட்டனர். அடிப்படை உரிமைகளின் அமலாக்கம் நிறுத்திவைக் கப்பட்டதால், உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றங்களும் கூட மக்களுக்கு அடிப்படை உரிமைகள் சார்ந்த நிவாரணங்களை வழங்க முடியாமல் இருந்தன.

எனவே, இன்றைய சூழலில் மக்கள் அரசமைப்பு சட்டத்தை உணர்ந்து படிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் நீதிமன்றங்களை மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக பயன்படுத்த முடியும். எனவே, இந்திய அர சமைப்புச் சட்டத்தை எவ்வித சமரசமும் இன்றி பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.

இதில், கல்லூரி முதல்வர் பேகம் பாத்திமா, தலைமை நிர்வாக அதிகாரி மாணிக்கம், துணை முதல்வர் சாந்தகுமாரி, உதவி பேராசிரியர் அன்சிர்ப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# ராகவா லாரன்ஸ் நற்பணி மன்றம் சார்பில் பொங்கல் நிகழ்ச்சி



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுக்கா, சோகுப்பம் கிராமத்தில் ராகவா லாரன்ஸ் மக்கள் சேவை நற்பணி மன்றம் சார்பில் ஏழாம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு மாவட்ட தலைவர் தமிழ் லாரன்ஸ் தலைமை தாங்கினார்.செஞ்சி ஒன்றிய தலைவர் சந்தோஷ் மற்றும் செஞ்சி ஒன்றிய பொருளாளர் பெருமாள் ஆகியோர் ஏற்பாட்டில் பொதுமக்கள் இணைந்து பொங்கலிட்டு மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோபி துணை ஒருங்கிணைப்பாளர் அருண் இணை ஒருங்கிணைப்பாளர் பாலாஜி வழக்கறிஞர் அணி மகேஷ் ஜோதி,மணி வெங்கடேஷ் முரளி உள்ளிட்ட

அஜய்ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# வந்தவாசியில் பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு...!



வந்தவாசி, ஜன 22

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி காவல் துறை மற்றும் அன்பால் அறம் செய்வோம் சேவைக் குழு சார்பில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் டிஎஸ்பி தீபக் ரஜினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும் காவல் உதவி ஆய்வாளர் விநாயகமூர்த்தி தலைமையில் சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி வந்தவாசியில் பழைய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு மைம் சைகை நாடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நாடகத்தை வசீகரன், சுகிசிவம் அல்லாஹ் பகஷ் ஆகியோர் நடித்துக் காட்டினர்.

அறக்கட்டளை நிறுவனர் அசாருதீன் விழிப்புணர்வு உரையாற்றினார். மேலும் நிகழ்வில் கிஷோர்ராஜ், பரத்ராஜ் அஜித் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் காவல் ஆய்வாளர் சுந்தரேசன் நன்றி கூறினார்.

# யாரிந்த சேலம் அலமேலு அக்கா பிசினஸ் மேன் மற்றும் பிரபலங்களை குறிவைக்கும் அலமேலு.



சேலம். ஜன. 22–

சேலம் மாவட்டத்தை சேர்ந்த அலமேலு என்பவர், தன்னை ஒரு வழக்கறிஞர் என்று சொன்னதால்தான், பலரும் அவரிடம் மிகுந்த மரியாதை வைத்து பேசினார்கள்.

கடைசியில் அலமேலு செய்த காரியத்தை பார்த்தீங்களா? இந்த சம்பவம் தொடர்பாக எண்ணற்ற நபர்கள் தொடர்ந்து கைதாகி கொண்டே உள்ளனர்.. என்ன நடந்தது சேலத்தில்?

சேலம் மாவட்டம் பூசாரிபட்டியை சேர்ந்தவர்தான் அலமேலு.. 25 வயதாகிறது.. திருமணமானவர்... இவருக்கு ஓமலூரை அடுத்த ஆர்.சி.செட்டிபட்டியை சேர்ந்த சகோதரர்களான ஜனார்த்தனன் (28) மற்றும் ஜனஅம்சபிரியன் (28) ஆகியோருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது..

சேலம் அலமேலு அக்கா: இந்த பழக்கத்தை பயன்படுத்திக் கொண்டு 3 பேரும் சேர்ந்து பணம் பறிக்கும் நோக்கில் திட்டம் தீட்டியுள்ளனர். அதன்படி ஓமலூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள முக்கிய நபர்கள், அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டோரின் செல்போன் நம்பர்களை சேகரித்துள்ளனர்.

வக்கீல் ஆண் நண்பர்கள்: பிறகு அந்த நம்பர்களுக்கு அலமேலுவை தொடர்பு கொள்ள வைத்து, நட்பாக பேச வைத்து, அதன் மூலம் அவர்களிடம் எல்லாம் பழக்கம் ஏற்படுத்தியுள்ளனர். செல்போனில் தொடர்ந்து பேசுவதன் மூலம் நம்பிக்கை பெற்ற அலமேலு, அந்த நம்பிக்கையை வைத்தே பலரிடமிருந்து பணம் பெற துவங்கினார்..

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தை சொல்லி பணம் வாங்கி உள்ளார்.. ஒரு கட்டத்தில் அவர்கள் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டபோது, நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அழைப்பாராம்..

உடனே அலமேலுவின் பேச்சை நம்பி வந்த ஆண்களை வீட்டிற்குள் வரவழைத்து, சக கும்பல் உறுப்பினர்கள் சேர்ந்து அவர்களை கட்டிப்போட்டு, ஆடைகளை களைந்து ஆபாசமாக வீடியோ எடுத்துவிடுவார்களாம்.. அந்த வீடியோக்களை காட்டி, லட்சக்கணக்கில் பணம் தர வேண்டும் என்றும், பணம் தராவிட்டால் சமூக வலைதளங்களில் வெளியிடுவோம் என்றும் மிரட்டி பணம் பறித்துள்ளனர்.

சிக்கிய பல பிரபலங்கள்: இப்படி கடந்த சில மாதங்களாகவே இந்த கும்பலின் சதி வலையில் பலர் சிக்கியதாக தெரிகிறது.. இவர்கள் எல்லாருமே பெரும் புள்ளிகள், பிரபலங்களும்கூட..

இதனால் அவமானத்தாலும், பயத்தாலும் போலீசுக்கு போகவில்லை.. மேலும் அலமேலு கேட்ட பணத்தையும் பலர் கொடுத்ததாகவும் தெரிகிறது..

அலமேலுவின் இந்த வலையில் கடைசியாக விழுந்தவர்தான் பூபதி... ஓமலூர் போலீஸ் ஸ்டேஷனில் சப்இன்ஸ்பெக்டராக உள்ளார்.. 32 வயதாகிறது.. ஆர்.சி.செட்டிபட்டி பகுதியை சேர்ந்த ஒரு கொலை வழக்கு தொடர்பாக 2 பேர் மீது வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வந்தபோதுதான் வக்கீல் அலமேலு இவருக்கு அறிமுகமாகி உள்ளார்.

கேஸ் விஷயமாக அடிக்கடி பேச வந்த அலமேலு, சில நாட்களிலேயே பூபதியிடம் நெருங்கி பழகி உள்ளார்.. வழக்கு செலவுக்கு அவசர தேவை என்று சொல்லி, பூபதியிடம் இருந்து 92,0000 ரூபாயை கடனாக அலமேலு வாங்கியுள்ளார். அதை பூபதி திரும்ப கேட்டபோதுதான் இருவருக்கும் தகராறு வெடித்துள்ளது..

தனிமையில் அலமேலு: பணத்துக்கு பதிலாக புதிய செல்போன் ஒன்றை தருவதாக பூபதியிடம் அலமேலு சொன்னாராம்.. அந்த செல்போனை வீட்டுக்கு வந்து வாங்கி கொள்ளும்படி சொல்லவும், பூபதியும் சென்றுள்ளார்.. அப்போது பூபதியுடன் அலமேலு நெருங்கி பேசியிருக்கிறார்.. இருவரும் நீண்ட நேரம் தனிமையில் இருந்துள்ளனர்... இதை அலமேலுவின் ஆண் நண்பர்கள் ரகசியமாக செல்போனில் வீடியோ எடுத்துள்ளனர்..

மேலும் பூபதி அணிந்திருந்த 3 சவரன் செயின், 30000 ஜிபே மூலம் பணம் பறித்து, பூபதியை அங்கிருந்து அடித்து விரட்டி உள்ளனர். இதற்கு பிறகுதான் போலீசுக்கு சென்றுள்ளார் பூபதி. அலமேலுவிடம் இவரும் சிக்கி கொண்டார்.. பணம் மற்றும் நகைகளை இழந்துள்ளார்... தன்னை போல இனி யாருமே பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தீவட்டிப்பட்டி போலீசில் அலமேலு மீது புகார் அளித்தார்.

நீளும்கைது நடவடிக்கைகள்: அதன்பேரில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி, செம்மாண்டப்பட்டியை சேர்ந்த முருகேசன் (36), செல்வன் (28), ராகிபட்டியை சேர்ந்த திருமால் அழகன் (21), பிரவீன் குமார் (23), பூசாரிப்பட்டியை சேர்ந்த போலி வக்கீல் அலமேலு (25) உள்ளிட்ட 9 பேர் கொண்ட கும்பலை கடந்த 4 நாட்களுக்கு முன்பு கைது செய்தனர்.

இப்போது இதே விவகாரத்தில் மேலும் 4 பேர் சிக்கி உள்ளனர்.. காமலாபுரத்தை சேர்ந்த தனியார் பள்ளி பஸ் ஓட்டுனர் கணேசன் (44) அளித்த புகாரின் அடிப்படையில், இந்த குற்றச்செயலின் மூளையாக செயல்பட்டதாக கூறப்படும் ஜனார்த்தனன், ஜனஅம்சபிரியன், செம்மாண்டப்பட்டி ஸ்ரீதர், ஆர்சி செட்டிப்பட்டி கவுதமன் ஆகிய 4 பேரையும் ஓமலூர் போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.. அவர்கள் பயன்படுத்திய செல்போன்களில் இருந்தும் பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன.. இந்த கும்பல் மோசடி செய்தவர்களில் காவல் உதவி ஆய்வாளர், பஸ் டிரைவர் உட்பட 9 பேர் அடக்கம்.. இந்த வழக்கில் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என போலீசார் சந்தேகிப்பதால், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தின விழாவினை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் வாக்குப்பதிவு செயல் விளக்க மையத்தில் வைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவு செய்து அதன் செயல்பாடுகளை பார்வையிட்டார்.

# காரமடையில் திருமுருகன் பக்தர்கள் குழுவின் 50வது ஆண்டு பொன்விழா!!!



கோவை: ஜன22

கோவை மாவட்டம் காரமடை அருள்மிகு ஸ்ரீ நஞ்சுண்டேஸ்வரர் கோவில் வளாகத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் திருமுருக பக்தர்கள் குழுவின் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி தலைவர் கணேசன்,செயலாளர் தண்டபாணி,குருசாமி தங்கவேலு ஆகியோர் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா ஜனவரி 20 அன்று கணபதி ஹோமத்துடன் தொடங்கியது.அடுத்து கண்ணார்பாளையம் தன்னாசி அப்பன் கோவிலில் இருந்து பால்குடம், விபூதி காவடி,மலர் காவடி மற்றும் காவடி எடுத்து வருதல் நிகழ்ச்சி தேர் வீதிகளில் வீதி உலாவாக வந்து முருகன்கோவிலில் அபிஷேகமாக செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து கோவிலில் எழுந்தருளியுள்ள முருகப்பெரு மான், வள்ளி,தெய்வானை சிலைகளுக்கு அபிஷேக ஆராதனை, பாலாபிஷேகம்,சந்தன காப்பு அலங்காரம் செய்து முருகன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# வந்தவாசி போர் நினைவு தின சிறப்பு கருத்தரங்கம்..!




வந்தவாசி, ஜன 22:

ஜனவரி 22 வந்தவாசி போர் நடைபெற்ற நினைவு தினம் ஆகும். 1760 ல் இந்த போர் நடைபெற்று இன்று 267 ஆண்டுகள் ஆகின்றன. அதை நினைவுக்கூறும் வகையில் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பூங்குயில் பதிப்பகம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் இணைந்து வந்தவாசி போர் சிறப்பு கருத்தரங்கத்தை பாலாம்பாள் ஐடிஐ வளாகத்தில் நடத்தியது. இந்த நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் என்.எஸ். குமார் தலைமை தாங்கினார். ஓய்வு பெற்ற கல்வி அலுவலர் ஜெயக்கண்ணு முன்னிலை வகித்தார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, கவிஞர் அ.ஜ.இஷாக் பங்கேற்று, வந்தவாசி போர் பற்றிய தகவல்களையும், குறிப்புகளையும், மாணவர்களுக்கு கருத்துரையாக வழங்கினார். மேலும் இந்த நிகழ்வில் வந்தவாசி பற்றிய அரிய தகவல்களை உதவி கருவூல அலுவலர் ஏ. சத்தியமூர்த்தி வழங்கினார். வந்தவாசி போர் பற்றிய சிறப்பு கவிதையை கவிஞர் தமிழ்ராசா வாசித்தார். இந்த நிகழ்வில் எக்ஸ்னோரா கிளை தலைவர் சு.தனசேகரன், நல்லாசிரியை சா.ரசீனா, இயக்குநர் விஜய் ஆதிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் நிகழ்ச்சியில் வந்தவாசி கோட்டையை மேலும் சிதையாமல் அரசு பராமரித்து நினைவுச் சின்னமாக உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது. இறுதியில் பூங்குயில் பதிப்பகம் ஆசிரியர் டி.எல். சிவகுமார் நன்றி கூறினார்.



கோயம்புத்தூர் மாவட்டம் மோப்பிரிபாளையம் பேரூராட்சியில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க மறு புகைப்படக்கண்காட்சியினை செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் நடத்தப்பட்டதை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் நடப்பாண்டில் 162 பெண்களுக்கு ரூ.71.50 இலட்சம் திருமண நிதியுதவி மற்றும் 1296 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கப்படுகிறது.

## ஏழை, எளிய பெண்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழை, எளிய பெண்களின் முன்னேற்றத்திற்கென எண்ணற்றதிட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் புதுமைப்பெண் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயண திட்டம், பெண் தொழில்முனைவோர் நிதியுதவி என எண்ணற்ற திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் ஏழைப் பெண்களுக்கு, திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. கடந்த 23.05.2016 முதல் பட்டம் / பட்டயம் படித்த ஏழை பெண்களுக்கு ரூ.50,000/ திருமண நிதியுதவியுடன் 8 கிராம் தங்க நாணயம் மற்றும் 10 மற்றும் 12 வகுப்பு படித்த ஏழை பெண்களுக்கு ரூ.25,000/ திருமண நிதியுதவியுடன் 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் 2022 2023ம் ஆண்டில் 215 பெண்களுக்கும், 2023–2024ம் ஆண்டில் 751 பெண்களுக்கும், 2024–2025ம் ஆண்டில் 245 பெண்களுக்கும் என 1,211 பெண்களுக்கு ரூ.6.05 கோடி மதிப்பில் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தலா 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 20252026ம் ஆண்டில் நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் 44 பெண்களுக்கு ரூ.19.00 இலட்சம் திருமண நிதியுதவி, 352 கிராம் தங்கம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் 29 பெண்களுக்கு ரூ.13.00 இலட்சம் திருமண நிதியுதவி, 232 கிராம் தங்கம், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் 20 பெண்களுக்கு ரூ.9.00 இலட்சம் திருமண நிதியுதவி, 160 கிராம் தங்கம், பரமத்தி சட்டமன்ற தொகுதியில் 18 பெண்களுக்கு ரூ.8.50 இலட்சம் திருமண நிதியுதவி, 144 கிராம் தங்கம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் 32 பெண்களுக்கு ரூ.13.25 இலட்சம் திருமண நிதியுதவி, 256 கிராம் தங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதியில் 19 பெண்களுக்கு ரூ.8.75 இலட்சம் திருமண நிதியுதவி, 152 கிராம் தங்கம் என மொத்தம் 162 பெண்களுக்கு ரூ.71.50 இலட்சம் திருமண நிதியுதவி மற்றும் 1296 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கப்படுகிறது.

தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற சீராப்பள்ளியைச் சேர்ந்த திருமதி கிருத்திகா க/பெ.முத்துகுமார் அவர்கள் தெரிவிக்கையில்,

எங்களுக்கு திருமணமாகி 2 ஆண்டுகள் ஆகிறது. நானும், எனது கணவரும் தனியார் நிறுவனத்தில் தின கூலி அடிப் படையில் வேலை செய்து வருகிறோம். நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். எனக்கு ஒரு தங்கை உள்ளார். எனது பெற்றோர் கூலி வேலை செய்துதான் எங்களை படிக்க வைத்தனர். தமிழ்நாடு அரசின் மூலம் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் மூலம் நாங்கள் பதிவு செய்திருந்தோம். தற்பொழுது எங்களது மனு ஏற்கப்பட்டு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்க நாணயமும், ரொக்கமாக



தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற சீராப்பள்ளியைச் சேர்ந்த பயனாளி திருமதி கிருத்திகா க/பெ.முத்துகுமார்

ரூ.50,000/மும் வழங்கப்பட்டுள்ளது. தங்கம் விற்கும் விலையில் தமிழ்நாடு அரசின் மூலம் இத்தகைய உதவி கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியாகவும், உதவியாகவும் உள்ளது. எனது பெற்றோர் மிகுந்த சிரமான சூழ்நிலையில் தான் எனக்கு திருமணம் செய்து வைத்தனர். எங்களை போன்ற ஏழை, எளிய பெண்களின் திருமண கனவினை நினைவாக்கும் வகையில், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

# 37.வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, ஈரோட்டில் வாசன் கண் மருத்துவமனை சார்பில், வாகன ஓட்டுனர்களுக்கு இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண புரை அறுவை சிக்ச்சை முகாம் நடைபெற்றது.

ஈரோடு. ஜன. 22

37.வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, ஈரோட்டில் வாசன் கண் மருத்துவமனை சார்பில், வாகன ஓட்டுனர்களுக்கு இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண புரை அறுவை சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலர் நித்யா, சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்பதைப் போல ஓட்டுனர்களுக்கு கண்பார்வை மிக முக்கியம் ஆண்டிற்கு ஒரு முறை அவர்கள் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் வாகனங்களை இயக்கும் பொழுது அதிக விபத்துகள் கண் பார்வை குறைபாடுகளால் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன கண்களில் சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும் உடனடியாக மருத்துவர்களை பார்த்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் மேலும் வாகன ஓட்டுநர்கள் முதல் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் மருத்துவர்கள் ஆலோசனைகள் ஏற்று கவனமாக பராமரிப்பு செய்ய வேண்டும். மருத்துவர்களுக்கு இணையாக ஓட்டுநர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வரக்கூடிய நோயாளிகளை காப்பாற்றுகிறார்கள். அதைப் போலவே பாதுகாப்பாக பயணம் செய்பவர்களின் உயிர்களுக்கு ஓட்டுநர்களே பாதுகாப்பை தருகின்றனர். கடவுளுக்கு இணையாக மருத்துவர்கள் இருப்பதை போல் ஓட்டுநர்களையும் கடவுளுக்கு இணையாக மதிக்கின்றேன்.. ஓட்டுனர்கள் தங்களது தொழிலை பெருமையாக கருத வேண்டும். சுய ஒழுக்கத்தை ஓட்டுனர்கள் கடைபிடிக்க வேண்டும். செல்போன் டிரைவிங், மதுபானம் அருந்தி விட்டு ஓட்டுவதை தவிர்க்க வேண்டும், மற்ற ஓட்டுனர்கள் அது போல் ஓட்டுவதையும் தடுக்க வேண்டும்.. ஒவ்வொரு நாளும் விபத்துல்லா உலகத்தை உருவாக்குவோம் என்ற உறுதிமொழியுடன் ஓட்டுநர்கள் செயல்பட வேண்டும். என கேட்டுக் கொண்டார்..



இந்த நிகழ்ச்சியில் மாவட்ட போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் வித்யா, போக்குவரத்து ஆய்வாளர் ரமேஷ் ஈரோடு லாரி உரிமையாளர்கள் சங்கத்தலைவர் துரைசாமி, மருத்துவர்கள் சிந்தனை,மனோரமா எஸ். பஹோதி, சரண்யா,ப்ரீத்தி மது பாலா, பொதுமேலாளர் வெங்கடேஷ், மண்டல மேலாளர் செல்வம், மார்கெட்டிங் மேலாளர் ஜெகதீஸன், கோவிந்த ராஜ், தமிழ்செல்வன் உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.

# வடபழனிபூந்தமல்லி இடையிலான மெட்ரோ ரெயில் சேவை: ரெயில்வே வாரியம் ஒப்புதல்”,

“சென்னை, சென்னையில் 2ஆம் கட்ட மெட்ரோ திட்டத்தில் மெரீனா கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி சுற்றுச்சாலை வரையிலான வழித்தடம் 26 கி.மீ. தொலைவுக்கு அமையவுள்ளது. ஏற்கெனவே முதல்கட்ட மெட்ரோ திட்டத்தில் வடபழனி இணைக்கப்பட்ட நிலையில், 2ஆம் கட்டத்தில் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலான 3ஆவது வழித்தடமானது வடபழனி மெட்ரோவைக் கடந்து பூந்தமல்லி செல்லும் வகையில் ரெயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. அதில், வடபழனி முதல் பூந்தமல்லி வரையிலான 16 கி.மீ. தொலைவுக்கான மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட்டடது. ரெயில் என்ஜின் சோதனையும் நடத்தப்பட்டு ரெயில் பாதை வடிவமைப்புக்கான உறுதிச் சான்றும் பெறப்பட்டது. அண்மையில், வடபழனிபூந்தமல்லி இடையேயான மெட்ரோ ரெயில் தண்டவாளத்தின் பாதுகாப்பு உறுதித்தன்மை சோதனை நடத்தப்பட்டது. இந்த நிலையில், வடபழனிபூந்தமல்லி இடையிலான மெட்ரோ ரெயில் வழித்தடத்துக்கு இறுதிகட்ட ஒப்புதலை இந்திய ரெயில்வே வாரியம் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து, வரும் பிப்ரவரிக்குள் வடபழனிபூந்தமல்லி வழித்தடத்தில் ரெயில்கள் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”,

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி: டிஎஸ்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் பங்கேற்பு






வந்தவாசி, ஜன 22:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து, சாலை பாதுகாப்பு துறை, செய்யாறு மற்றும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்த நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் சி.ருக்மணி தலைமை தாங்கினார். கல்லூரி தலைவர் மு. ரமணன், செயலாளர் பிரியாரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக, செய்யாறு மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தில் குமார் மற்றும் வந்தவாசி டிஎஸ்பி தீபக் ரஜினி ஆகியோர் பங்கேற்று சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பற்றியும், தலைக்கவசம் அணிவதின் முக்கியத்துவம் பற்றியும், விபத்தில்லா பயணம் குறித்தும் மாணவிகளுக்கு விழிப்புணர்வு தகவல்களை பகிர்ந்தனர். மேலும் கல்லூரிக்கு இருசக்கர வாகனத்தில் வரும் மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் தலைக்கவசங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கல்லூரி மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி உருளையான்பேட்டை தொகுதியில் லட்சிய ஜனநாயக கட்சியின் அலுவலகத்தை நிறுவனத்தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.





புதுச்சேரி, ஜன.22–

உருளையான்பேட்டை தொகுதி லட்சிய ஜனநாயக கட்சி நிர்வாகி கௌதம் குமார் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் JCM மக்கள் மன்ற தலைவர் ரீகன் ஜான்குமார், பொதுச் செயலாளர்கள் டாக்டர். துரைசாமி, பிரபாகரன், மண்டல பொதுச் செயலாளர்கள் சுரேஷ், JCM மக்கள் மன்ற பொருளாளர் அயூப் கான், அரியாங்குப்பம் தொகுதி நிர்வாகி N.R.வாழுமுனி, நடிகர் தாடி பாலாஜி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்பு.

தொடர்ந்து நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அனைவருக்கும் வீட்டுக்கு தேவையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பை லட்சிய ஜனநாயக கட்சி நிறுவனத்தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் வழங்கினார்.

முன்னதாக விழா அரங்கிற்கு அருகே உள்ள ஸ்ரீ புற்று மாரியம்மன் கோவிலில் லட்சிய ஜனநாயக கட்சி நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் சாமி தரிசனம் செய்தார்.

நடிகர் தாடி பாலாஜி பேச்சு

நான் எவ்வளவோ கூட்டத்திற்கு போயுள்ளேன் ஆனால் இங்கு தான் அனைவரும் இன்முகத்துடன் வந்துள்ளீர்கள், அதற்கு காரணம் என் அண்ணன் ஜோஸ் சார்லஸ் மார்டின் தான். அவர் உங்களுக்கு தொடர்ந்து நல்லது செய்வார்.

நிறுவனத்தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் பேச்சு

அரசியலுக்கு ஏன் வந்துள்ளோம் என்றால் இங்கு நிறைய மக்கள் பின்தங்கி உள்ளனர், கழிவுநீர் கலந்த குடிநீரால் பாதிக்கப் பட்ட பகுதியும் இந்த உருளையான்பேட்டை தான், ஆட்சியாளர்கள் எதையும் கண்டுகொள்ளவில்லை, அனைவருக்கும் நல்ல கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும், அதற்காக தான் நாங்கள் வந்துள்ளோம்.

# கோவையில் ஓட்டுநர் பயிற்சி கூட்டமைப்பு சார்பில் சீட்பெல்ட் அணிவது குறித்து வாகன விழிப்புணர்வு பேரணி!!!



கோவை: ஜன22

சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு கோவையில் ஓட்டுநர் பயிற்சி கூட்டமைப்பு சார்பில் சீட் பெல்ட் அணிவது தொடர்பாக வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு அரசு சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கோவையில் மாவட்ட நிர்வாகம், மாநகர காவல் துறை ,போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு குறித்து தொடர்ச்சியாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டு வருகின்றன.அதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ஓட்டுநர் பயிற்சி கூட்ட மைப்பு சார்பில் நான்கு சக்கர வாகனங்களில் செல்லும் போது சீட் பெல்ட் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. வஉசி மைதானத்தில் துவங்கிய இந்த பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார், கோவை மாநகர காவல் ஆணை யாளர் கண்ணன் ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர்.

இந்த பேரணியானது மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி,காந்திபுரம், செம்மொழிப் பூங்கா வழியாக மீண்டும் வஉசி மைதானத்தில் நிறைவுற்றது.இதில் கோவை ஓட்டுநர் பயிற்சி கூட்டமைப்பை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

# முதலியார்பேட்டையில் குப்பைகளை அகற்றக்கோரி எம்.எல்.ஏ. சம்பத் திடீர் போராட்டம்: நகராட்சி அலுவலகத்திற்கு பூட்டு



புதுச்சேரி, ஜன. 22:

புதுச்சேரி முதலியார்பேட்டை தொகுதியில் குப்பைகளை முழுமையாக அகற்ற வலியுறுத்தி, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் தலைமையில் நகராட்சி அலுவலகத்தைப் பூட்டி இன்று போராட்டம் நடைபெற்றது.

சம்பவத்தின் பின்னணி:

புதுச்சேரி முழுவதும் தற்போது தனியார் நிறுவனம் மூலம் குப்பைகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இருப்பினும், கடந்த சில நாட்களாக முதலியார்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் குப்பைகளை அகற்றும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகப் புகார்கள் எழுந்தன. இதனால் ஆங்காங்கே குப்பைகள் தேங்கி நின்று துர்நாற்றம் வீசியது.

போராட்ட விவரம்: குப்பைகளை முறையாக அகற்றாததைக் கண்டித்து, எம்.எல்.ஏ. சம்பத் தனது ஆதரவாளர்களுடன் நேற்று மரப்பாலம் அருகே உள்ள நகராட்சி அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு திடீரென அலுவலகத்தின் கதவைப் பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், அந்தப் பகுதியில் குப்பை அள்ளும் வாகனங்களைத் தடுத்து நிறுத்திய அவர், தூய்மைப் பணியாளர்கள் பணிக்குச் செல்ல விடாமல் தடுத்து தனது எதிர்ப்பைப் பதிவு செய்தார். அதனைத் தொடர்ந்து, எம்.எல்.ஏ. நேரடியாகக் களத்தில் இறங்கி தனது ஆதரவாளர்களுடன் குப்பை அள்ளும் பணியிலும் ஈடுபட்டார்.

அதிகாரிகளின் சமரசம்: இது குறித்துத் தகவல் அறிந்த புதுச்சேரி நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சுரேஷ்ராஜ், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து எம்.எல்.ஏ. சம்பத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது தனியார் நிறுவன அதிகாரிகளுடனும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இனிமேல் குப்பைகளை அகற்றும் பணியில் எவ்விதத் தொய்வும் இருக்காதுஎன அதிகாரிகள் உறுதி அளித்ததன்பேரில், எம்.எல்.ஏ. தனது போராட்டத்தைக் கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றார். அதன் பின்னர் தூய்மைப் பணியாளர்கள் வழக்கம்போல் தங்களது பணியைத்தொடங்கினர்.

# கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு



திருவள்ளூர் ஜன 22 :

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையின் கீழ் செயல்படும் பொது விநியோக அங்காடியில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் பொருள் இருப்பு குறித்தும் பொருட்களை விநியோகம் செய்வது தொடர்பான பதிவேடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, விவரங்களை கேட்டறிந்தார். தொடர்ந்து தாமரைக்குளம் பகுதியில் மழைநீர் வடிக்கால் வாய்களில் கழிவுநீர் கலந்து தாமரை குளம் மாசுப்படுவது தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

மேலும், பெத்திகுப்பம் ஊராட்சியில் தமிழர் மறுவாழ்வு முகாம் பகுதியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 198 வீடுகளின் கட்டுமான இறுதி பணிகளையும், சாலை வசதிகள், மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளிட்ட பணிகளையும், கும்மிடிப்பூண்டி பேரூராட்சி சார்பில் ரூ.7.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளையும், மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, ஒபசமுத்திரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.34.23 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டட கட்டுமானப் பணிகளையும், ரூ.30.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

இறுதியாக, பூவலம்பேடு ஊராட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்க கட்டிட கட்டுமான பணிகளையும், மங்களபுரம் ஊராட்சியில் ரூ.93 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தரை பால கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

இதில் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) எஸ்.ஜெயக்குமார், உதவி செயற்பொறியாளர் சரவணன், கும்மிடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் எம். பாஸ்கரன், கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் சுரேஷ்குமார், இளநிலை பொறியாளர் மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் கஜலட்சுமி, கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில், சந்திரசேகர், உதவி பொறியாளர்கள் குருபிரசாத், ஐசக் கொவின், பத்மநாபன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மணப்பாறை அருகே மர்ம விலங்கு கடித்து ரூ. 6 லட்சம் மதிப்புள்ள 47 செம்மறி ஆடுகள் கொடூரமாக உயிரிழப்பு: பொதுமக்கள் அதிர்ச்சி.



திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள பண்ணப்பட்டியில் மேய்ச்சலுக்குச் சென்ற செம்மறி ஆடுகளை மர்ம விலங்குகள் கடித்துக் குதறியதில் 47 ஆடுகள் உயிரிழப்பு. கருப்பரெட்டியபட்டி மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த செம்மறி ஆடுகளை மர்ம விலங்கு கூட்டம் துரத்தியதில் மிரண்டு ஓடிய ஆடுகளை ஆட்டின் உரிமையாளர்கள் ராஜேந்திரன் (வயது 40), பொன்னுச்சாமி (வயது 47) இருவரும் இன்று காலை காணாமல் போன ஆடுகளை தேடிச் சென்ற போது மலைப்பகுதியில் ஆங்காங்கே ஆடுகள் கழுத்து, கால், வயிறு உள்ளிட்ட உடலின் பல்வேறு பகுதிகளில் கடித்து ரத்தத்தை உறிஞ்சி கொன்றுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த வருவாய் துறையினர், மற்றும் வனத்துறையினர் சம்பவ இடத்தில் ஆய்வு செய்து வருகின்றனர். கால்நடை மருத்துவ டாக்டர் ரமேஷ் ஆடுகளை மருத்துவ பரிசோதனை செய்து வருகின்றார். இறந்த ஆடுகளின் மதிப்பு சுமார் ரூ.ஆறு லட்சம் ஆகும்.

# திருவள்ளூரில் வரும் 23ம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் ஜன 22 :

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் சார்நிலை அலுவலகங்களான அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் பிரதி மாதம் இரண்டாவது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமையில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் வரும் 23.01.2026 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் காலை 10 மணி முதல் மாலை 3 வரை சிறு அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்; நடைபெற உள்ளது.

இதில் 25க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 250க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தங்களுக்கு தேவையான வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள உள்ள வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்கள் தனியார்துறை இணையதளத்தில் (www.tnprivatejobs.tn.gov.in) பதிவு செய்து கொள்ளலாம்.

முகாமில் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, பட்ட படிப்பு, ஐடிஐ மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் கலந்து கொண்டு தனியார் துறையில் நிர்வாகப் பணி போன்ற பல்வேறு வகையான பணி வாய்ப்பினைப் பெற்று பயனடையலாம். பணி நியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது. எனவே கல்வித் தகுதியும் விருப்பமும் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# பாதயாத்திரை குறித்து காங்கிரஸ் கிழக்கு மாவட்டத் தலைவர் வேல்முருகன் தலைமையில் ஆலோசனை



புதுச்சேரி | ஜனவரி 22, 2026

புதுச்சேரி காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில், மாவட்டத் தலைவர் வேல்முருகன் தலைமையில் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முக்கிய முடிவுகள்: வரும் ஜனவரி 22ஆம் தேதி நடைபெற உள்ள பாதயாத்திரை குறித்த முன்னேற்பாடுகள் மற்றும் திட்டமிடல் குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த பாதயாத்திரையை மிகச் சிறப்பாகவும், எழுச்சியுடனும் நடத்துவது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

பங்கேற்றவர்கள்: இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கட்சியின் முக்கியப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்:

பொறுப்பாளர்கள்: டாக்டர் விஜயகுமாரி, கிருஷ்ணமூர்த்தி, செல்வாம்பிகை. செயலாளர்கள்: ராஜாராம், குமரன், ரவி உடையார். முன்னாள் கவுன்சிலர்: ராஜலட்சுமி. வட்டாரத் தலைவர்கள்: ராஜ்மோகன், நடராஜன். மேலும், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தொகுதி நிர்வாகிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் பாதயாத்திரைக்கான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421